தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

—

செவ்வாய்க்கிழமை, 1977 ஜூலை 12.

—

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் (திரு. முனு ஆதி) அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் இன்று இல்லை. அடுத்து, கவன ஈர்ப்பு. பேரவை விதி எண் 41-ன் கீழ் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தை திருவாளர்கள் க. சுப்பு, கு. ரமணி ஆகியோர் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, " கோவையில் சென்ற சில மாதங்களாக லோட்டஸ் மில், பிரகாஷ் மில், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில், கானப்பட்டி பத்மா மில் ஆகிய. . . ."

1. ஆய்வில் இருக்கும் உரிமைப் பிரச்னை பற்றிய விவரத்தைப் பேரவைக்கு அறிவிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் கொஞ்சம் அமருங்கள், ஒரு அறிவிப்பைச் செய்ய வேண்டும். இங்கே உரிமை மீறல்பற்றி கிளப்பப்பட்ட உரிமைப் பிரச்னை தலைவருடைய ஆய்விலே இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: என்ன உரிமைப் பிரச்னை என்றாவது நீங்கள் சொல்ல வேண்டாமா? சும்மா மொட்டைத் தாதன் குட்டையிலே விழுந்தான் என்று சொன்னால் என்ன அர்த்தம்? ஆய்விலே இருக் கலாம், அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை, ஆனால் உரிமை மீறல் பிரச்னை என்ன என்று சொல்வதில் என்ன தயக்கம்?

[1977 ஜூலை 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இன்னும் குறிப்பிலே உள்ள செய்திகளையும் பத்திரிகையிலே வந்த செய்திகளையும் ஒப்பிட்டுப் பார்க்கவில்லை. அதிலே இன்னும் உயிர் இருக்கிறது, பயப்படாதீர்கள்.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்னையே கொடுக்கக்கூடாது என்று சொல்லிவிடுங்கள். நாங்கள் கொடுக்கிறோம், இதுவரைக்கும் என்ன சொன்னீர்கள், இன்றைக்கு எடுத்துக் கொள்வதாகச் சொன்னீர்கள். நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இதற்கு முன்னாலே எல்லாம் இப்படிக் கொடுக்கப்பட்டு இந்த அவையிலே அறிவிக்கப்படவில்லையா, என்ன உரிமைப் பிரச்னை என்றுகூடச் சொல்வதற்கு என்ன தயக்கம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து புரிந்துகொள்ள வேண்டும். அந்த உரிமைப்பிரச்னை என்னுடைய ஆய்விலே இருப்பதாகத் தெரிவித்து இருக்கிறேன். ஆய்விலே இருக்கிற போது, அதைப்பற்றி ஏன் இங்கே சொல்லக்கூடாது என்று கேட்பதிலே நியாயம் இல்லை.

திரு. மு. கருணாநிதி: பொதுவாக ஒரு உரிமைப் பிரச்னை கொடுக்கப்படுகிறபோது அது உடனடியாக எடுத்துக்கொள்ளப் படாவிட்டாலும், அந்த உரிமைப் பிரச்னையை யார் கொடுத்திருக்கிறார்கள், அது என்ன உரிமைப் பிரச்னை என்று சொல்வது வழக்கம். இதை நாளைக்கு எடுத்துக்கொண்டாலும் கூட இன்று அது என்ன உரிமைப் பிரச்னை என்பதை அவைக்கு அறிவித்தால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றி ஆய்ந்து நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. க. சுப்பு: தலைவர் இப்படி விடாப்பிடியாக நாளைக்கு எடுத்துக் கொள்வோம் என்று சொல்வது சரியல்ல. முக்கியமான விஷயம்பற்றி உரிமைப் பிரச்னைகளையும் மற்றப் பிரச்னைகளையும் இங்கே கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விடாப்பிடியாக நான் இருக்கிறேன் என்று சொல்வது உங்களுக்குப் பெருமையாக இருக்கலாம். ஆனால் இங்கே நான் உட்கார்ந்திருக்கிற இடத்திற்கு அது பெருமையாக இருக்காது. இந்த இடத்தைப்பற்றி இவ்வளவு சொல்கிறீர்கள் என்றால் உறுப்பினராகிய நீங்கள் இன்னும் சரியாகப் பக்குவப்படவில்லையென்பதைத்தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1977 ஜூலை 12]

திரு க. சுப்பு: நான் 'அண்ணா' பத்திரிகையிலே வந்த செய்தியைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். நேற்றுக்கூட சட்டசபையிலே சுப்பு சண்டித்தனம் என்று போட்டிருக்கிறார்கள், இப்படிப் பட்ட விஷயங்களை நாங்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றி நீங்கள் எழுப்பலாம், ஆனால் ஆய்விலே இருக்கிறது என்று நான் சொன்னபிறகு அதைச் சொல்லுங்கள் என்று சொல்வது சரியல்ல.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, பல பத்திரிகைகளிலே பல செய்திகள் வருகின்றன. அவற்றையெல்லாம்பற்றி இங்கே பேசுவது முறையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானமொன்றை விதி 41-ன் கீழ் கொண்டுவருவார்கள்.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்கள் ஒவ்வொரு பிரச்னையிலும் இப்படிச் செய்தால் நான் இதைக்கூட விட்டுவிடுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க்கட்சி வரிசையிலே உள்ளவர்கள் பல ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுக்கிறோம், அவைகளும் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. உரிமைப் பிரச்னை முக்கியமான விஷயம்பற்றிக் கொடுத்தால் அதுவும் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை என்றால் என்ன அர்த்தம்? எதிர்க்கட்சி உறுப்பினர்களாகிய எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் சுப்பு அவர்கள் எதிர்க்கட்சித் தலைவரையும் வைத்துக்கொண்டு பாதுகாப்பு இல்லை என்று சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. தவறு இருந்தால் சுட்டிக்காட்ட வேண்டுமே தவிர பாதுகாப்பு இல்லை என்று பொதுவாக சொல்வது சரியல்ல, திரு. சுப்பு.

திரு. க. சுப்பு: நான் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. ரமணி.